உ

ஸ்ரீராமஜெயம்.

செஞ்சிமாநகரம்

தேசிங்குராஜன் கதை.

இஃது

சரவணபுரம்

சண்முககவிராயரவர்களால்

பாடுகையிடப்பட்டு.

[illegible]

ராயபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1879.

ஸ்ரீராமஜெயம்.

தேசிங்குராஜன் கதை.

காப்பு.

விநாயகர்தோத்திரம்.

விருத்தம்.

மேதினியோரெல்லாம் வியப்புடன்புகழ்வதாக
நீதிநெறியுஞ்செங்கோல் நிலைமையுந்தருமமுற்று
நிதிலாசென்றுங்காக்குந் தேசிங்குராசனற்சீர்க்
காதையையெடுத்துரைக்கக் கணபதிகாப்புத்தானே

முருகர்தோத்திரம்.

செயங்கொள்தேசிங்குராசன் சீர்கதைதனைச்சொல்ல
வயங்கொண்மாமயிலின்மேலேறி வருந்திருமுருகர்தூய
நயங்கொள்பாதத்தையுந்தான் நாயகிமார்கள்சீரார்
வியங்கொள்பாதத்தையுந்தான் விரும்பியேவணங்குவோமே.

சிவன்தோத்திரம்.

தஞ்சமென்றோரைக்காக்குந் தயாளதேசிங்குராஜன்
எஞ்சலில்கதையைச்சொல்ல வெந்தையாஞ்சுந்தரேசர்
செஞ்சரணத்தையுந்தன் றேவிபார்வதியாள்பாதங்
கொஞ்சுபாவடியையுங்கை கூப்பியேவணங்குவோமே.

விஷ்ணுதோத்திரம்,

சங்குசாங்கோதண்டந் தண்டுவாள்கரத்திற்கொண்டே
செங்கண்மால்பதமுஞ்சீரார் திருவின்பொற்பதமுநாளும்
பொங்குமாயிறைஞ்சியுன்னிப் புகழுந்தேசிங்குராஜன்
துங்கமாங்கதையைச்சீராய்ச் சொல்லுவோம்புவியினோர்க்கே.

சரஸ்வதிதோத்திரம்.

கலைகளுணர்ந்தேத்திப் போற்றுகின்ற
பாவாணர்க்குதவிசெய்து பாதுகாக்கும்
நிலைமையுள்ளதவளநிற முடையாள்வாசம்
நிகழுஞ்சரஸ்வதி யுபயதாளிறைஞ்சி
அலையெறியுங்கடல்சூழும் புவியோர்மெச்சும்
அனங்கனுங்கண்டச்சங் கொள்ளழகுறைந்த
விலையிலாமணிமுடித் தேசிங்குராஜன்
வியன்றருசீர்ச்சரிதைதனை விளம்புவோமே.

அவையடக்கம்.

முத்தமிழின்பயனுணர்ந்த புலவோர்முன்னே
மூடனடியேனுமென் போற்றுகின்ற

தேசிங்குராஜன்கதை

பத்திநிருந்தெழிற்செங்கோல் செலுத்துகின்ற
பராக்கிரமனதிவீர ராமனென்றே
எத்திசையும்புகழுந் தேசிங்குராசன்
எழிற்கதையிற்சொற்குற்றம் பொருட்குற்றங்கள்
யொத்தவிருக்கினுங்குதலைச் சொல்லைப்போலே
வியங்கொள்வார்பாராட்டி நயங்கொள்வாரே.

நாட்டுச்சிறப்பு.

சீருஞ்சிறப்புமுள்ள தேசிங்குமகாராசன்
பேரும்பிரபலமும் பெருகிவரும்படியாய்
செந்நெற்கதிபருத்துச் செழுத்துவளர்கிறதும்
கன்னற்கொழித்துக் காட்டைமறைப்பதுவும்
வன்புலியும்பசுவும் மருவியேவாழ்கிறதும்
தென்புடனேயானை செழுநக்கிரிகிறதும்
காடைகவுதாரி காட்டுப்புறாக்கள் வருதும்
பேடைமயில்கூடிப் பிரியாமடைகிறதும்
புன்னைபலாச்சோலை பொருந்திநிறைந்திடலும்
தென்னைமாம்வாழைமாதுஞ் செறிந்துநிறைந்திடலும்
சந்தனச்சோலைகளும் ஜாதிமல்லிபூத்திடலும்
மந்தாரைகோங்கு மல்லிகைப்பூச்சாலைகளும்
தாமரைப்பொய்கைகளும் தடாகமுள்ளேரிகளும்
வாமமுறுங்கான்யாறும் வாய்ப்பகளுமென்னசொல்வோம்

நகரச்சிறப்பு.

செஞ்சிநகர்ச்சீனாச் சிலைகற்செறிந்துமாப்போய்
எஞ்சலில்லாவீதிகளும் எழிற்றோரணநிரையும்
வாழைகமுகுகளெங்கும் வளமாகக்கட்டியதும்
ஏழையானைக்கூலியன்னமிட்டுவருவதும்
இந்திரலோகம்போ லிருக்குமரண்மனையும்
கந்தர்மின்னார்களிட கற்பின்முறைமைகளும்
வேதியர்கள்கூடி வேதம்படிப்பதுவும்
நீதிதவறாமல் நிகழ்புலவோர்பாடுவதும்
பொன்னகரின்மாதனைப்போல் பொருந்திநிறுவதும்
மன்னவன்கீர்த்திதனை வாழ்த்திவருகிறதும்

கதையின்வரலாறு.

வடக்கேவெகுதூரமிருக்குதுபார் மகமேருசாலொன்று
(அந்த) மகமேருசாலில்தபசுசெய்கிறார் வர்லைகூஷ்மரிஷிகள்
கர்த்தனைநோக்கித்தபங்கள்செய்கிறார் கனத்ததேசரிஷிகள்
சிவசிவாவென்றசத்தமுமங்கே தெய்வலோகங்கேட்கும்
அரகராவென்றசத்தமுமங்கே ஆகாயமட்டுமெட்டும்
கோவிந்தாவென்றசத்தமுமங்கே கொடிமுடிதான்கேட்கும்
மாயவாவென்றசத்தமுமங்கே வைகுந்தம்தான்கேட்கும்.
துலுக்கனொருவன்கர்த்தனைநோக்கித் தேடிதவஞ்செய்தான்

பகவானை நோக்கித்துலுக்கனொருவன் பாரதவஞ்செய்தான்
மந்திரவித்தைதந்திரவித்தை மகாவித்தைதானறிவான்
இந்தப்படியாய்ரிஷிகளெல்லாம் இருந்துதவஞ்செய்தார்

குதிரையின் பெருமை.

(அப்போ) தெய்வலோகத்தில்பிறந்தகுதிரை திசைதப்பிவருகுது
இரங்காகிருபையால்திசைதப்பிகுதிரை நடனமாடுதுபார் [பார்
உச்சிமலையில்புல்லுகள்மேய்ந்து ஒதுங்கிவருகுதுபார்
சாரலோரமாய்ப்புல்லுகள்மேய்ந்து சாய்ந்துவருகுதுபார்
கோடிசூரியனுதித்தாற்போலக் குலுங்கிவருகுதுபார்
தங்கமயமானகுதிரையைக்கண்டான் தவஞ்செய்யுந்துலுக்கன்
குதிரையைக்கண்டோடிவருகிறான் கோக்குதேசத்துலுக்கன்
துலுக்கனைக்கண்டுசர்ச்சனைசெய்குது தெய்வமேகக்குதிரை
அஞ்சனம்போட்டுக்குதிரைவலிமையை யறிந்துகொண்டானும்
மந்திரவலையைவிசிறிப்போட்டு மடக்கிப்பிடித்தானும்
தந்திரவலையைவிசிறிப்போட்டுத் தடவிப்பிடித்தானும்
மந்திரத்தாலேகுதிரைப்பாகனை வரிசையாய்வைத்தானும்
நாலாயிரம்பேர்குதிரைப்பாகற்கு நடுவாகவைத்தானும்
குதிரைமேலேகூடாரம்போட்டுக் கொண்டுமேவாரானும்
ஐந்துநாழிவழிதூரமிருந்து அதட்டிமேவாரானும்
தூரத்திலிருந்துகுதிரைப்பாகருஞ் சூழ்ந்துமேவாராம்
தகத்தகாயமாய்நடுவிலிருந்து தாண்டுமுன்னாலே
மந்திரவலையிலகப்பட்ட குதிரை வருகுதுமுன்னாலே
மந்திரத்தாலேமாயாபக்கிரி மடக்கிக்கொண்டுவாரான்
டில்லிக்குவெகுமதிகொடுப்போமென்று சேரக்கொண்டுவந்தான்
வெகுமதிசெய்யபாராசாரியை வெளியிலேகொண்டுவந்தான்
வெளியில்நிறுத்திப்பக்கிரிவனும் வேலையென்னசெய்தான்
குதிரையைச்சுற்றிக்கூடாரம்போட்டுக் கொடியகாவல்வைத்தான்
யானைசங்கிலிபோட்டுமடக்கினான் அந்தக்குதிரையைத்தான்
மந்திரத்தாலேசங்கிலிமாட்டி மடக்கிநிறுத்தினானும்
மந்திரவலையையவிழ்த்துவிட்டான் மாயாபக்கிரியும்
மயக்கந்தெளிந்துகண்ணாலேகண்டது பூர்ணமேகக்குதிரை
அண்டம்பிடித்துவிழுந்தாற்போலே அலறிகனைத்ததுபார்
கோட்டைபிடித்துவிழுந்தாற்போலே குலுங்கக்கனைத்ததுபார்
டில்லிபட்டணம்ஐங்காதவழியும் சேரநடுங்குதுபார்
கூடகோபுரமாடமண்டபம் குலுங்கிநடுங்குதுபார்
பட்டணமுள்ளசெனங்களெல்லாம் பதறிவிழுந்தார்கள்
பாட்சாதகத்துநடுங்கியவனும் பதறிவிழுந்தானும்
மூன்றுநாழிமூர்ச்சையாயினார் முழுதும்ராசதுரைகள்
பட்டணத்திலுள்ளசெனங்களெல்லாம் பதறிமூர்ச்சையானார்
டில்லிதுரையுமமூர்ச்சைதெளிந்து திகைத்தெழுந்தானும்
அண்ணாடாதம்பிடா ராஜசிங்கையாபு

(இது) என்ன அதிசயம் என்ன அதிசயம்ராஜலிங்கபாபு
அண்டம்பிடித்துவிழுந்ததோசொல்லும் ராஜலிங்கபாபு
ஏழுமேகமுங்கூடியிருந்ததோ இந்தவுலகிலேதான்
சலுதியிலோடிச்சுற்றிப்பாரும் ராஜலிங்கபாபு
ஆளுக்நல்லதாகட்டுமென்றான் ராஜலிங்கபாபு
ஒல்லைக்குதிரைமேலேறினான் ராஜலிங்கபாபு
ஓடியேசுற்றிப்பார்த்தானையா ராஜலிங்கபாபு
வடக்குதிசையில்மின்னுதுபாரும் வர்ணமேகப்புரவி
மின்னலைக்கண்டுகுதிரையைவிட்டான் ராஜலிங்கபாபு
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் கோங்குபக்கிரியும்
எதிரிலேவந்துசலாஞ்செய்தான் இருந்தபக்கிரியும்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜலிங்கபாபு
சலாமேசெய்துகுதிரையைக்கண்டான் ராஜலிங்கபாபு
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தான் ராஜலிங்கபாபு
ஐயாகேளும்ஐயாகேளும் கோங்குபக்கிரியே
எந்ததேசத்திலிருந்தகுதிரை இங்குகொண்டுவந்தீர்
தெரியவெனக்குசேதிசொல்லும் தேசபக்கிரியே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் கோங்குபக்கிரியும்
ஐயாகேளும்ஐயாகேளும் ராஜலிங்கபாபு
இந்தவலகத்திற்பிறந்ததேயல்ல யிந்தபுரவியுந்தான்
கோபம்வந்துமூண்டுக்கொண்டது குதிரைக்காளும்
கடகடகடகடகடவென்று கனைத்துநின்றதுவே
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை சொர்ணமேகக்குதிரை
பன்னிரண்டுவயதுஆச்சுதுபாரு பாராசாரிக்கு
வெள்ளிக்கிழமையில்பிறந்தகுதிரை வேகமானகுதிரை
ஒருவருமண்டக்கூடாதுபாரு உயர்ந்தமேகக்குதிரை
இந்தவுலகத்திலொருவருமில்லை இந்தக்குதிரையேற
மனதுணிந்துமேறினாளால் மாண்டுபோய்விடுவார்
தைரியம்கொண்டேறினாரானால் சதைந்துபோய்விடுவார்
தெய்வவரத்தினாற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
வரத்தினாலேபிறந்தபிள்ளை வந்துயேறவேணும்
பூமிபாரந்தீர்க்கப்பட்டவன் புரவியேறவேணும்
தேவரடியிற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
சுற்றிலுமிருக்கும்ராஜதுரைகள் துடித்துவிழுந்தாராம்
டில்லிதுரைக்குளனுங்கொடுக்கத் தேடிவந்தேனென்றான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராஜலிங்கபாபு
கேட்டவுடனேமனதுகலங்கிக் கீழேவிழுந்தானும்
விழுந்தவுடனேதைரியங்கொண்டு மெள்ளவெழுந்தானும்
எழுந்தவுடனேராசதுரைக்கு எழுதியேவிட்டானும்
ஓலையைக்கொண்டுகையிலேகொடுத்தார் ஓடிவந்ததூதர்
ஓலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் டில்லிபதுரைதானும்

தேசிங்குராஜன்கதை.

கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
தெய்வலோகத்துப்புரவியொன்று தேடிவந்ததாம்
குதிரையேறிச்சவாரிசெய்துநான் கொண்டுவரவேண்டும்
ஜல்திஜல்திகுதிரையைக்கொண்டுவா அர்க்காருபாப்பையா
பட்டத்துயானைகொண்டுவாடா அர்க்காருபாப்பையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
சலாம்வாங்கித்திரும்பினானையா அர்க்காருபாப்பையன்
தண்டிக்குச்சைகையூதினானையா அர்க்காருபாப்பையன்
பட்டத்துயானைவந்துநின்றது ராசன்முன்னாலே
யானையின்பேரிலேறினானையா டில்லிப்துரைதானும்
முதல்மந்திரிராஜலிங்கனும் முன்னேபோயிருந்தான்
மற்றமந்திரிபிரதானிகளும் வரிசையாய்நடந்தார்கள்
பேட்டிக்குவந்தராஜதுரைகள் தன்பின்னேநடந்தார்கள்
நாலாயிரம்பேர்துருப்புக்குதிரை நடந்ததுமுன்னாலே
காலால்சேனைகளாயிரம்பேர் கடுசநடத்திடுமே
திமிதிமிதிமிதிமிதிமிதிமியென்று சேனைநடத்திடவே
சேனைவருகிறதைக்கண்ணாலேகண்டது தெய்வமேகக்குதிரை
டுடுடுடுடுடுடுடுடுடுவென்று கர்ச்சினைசெய்ததுவே
கர்ச்சனைசெய்தசத்தத்தினாலே கீழேவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே அலறிவிழுந்தார்கள்
ஆனைசேனைகுதிரைகளெல்லாம் அங்கேவிழுந்திடவே
டில்லிப்துரையும்யானையின்மீதில் திக்கிட்டுவிழுந்தானும்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் துள்ளிவிழுந்தாராம்
மூலைக்குமூலை துருப்புக்குதிரைகள் முறித்துக்கொண்டோடுதுபார்
அவ்வதிசயத்தைக்கண்ணாலேகண்டான் டில்லிப்துரைதானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
நலந்திதுரைக்குமந்திரிமாரும் நயிங்கியோடிவந்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிப்துரைதானும்
(இது) என்னவதிசயமென்னவதிசயம் ராசலிங்கபாபு
இத்தனைநாளுமிந்தகுதிரையை எங்கும்பார்த்ததில்லை
டில்லிவந்ததைக்கண்ணாலேகண்டான் தேசபக்கிரியும்
முழங்கால்கீலேபோட்டேயவனும் முன்னேசலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிப்துரைதானும்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழ்ந்துசலாஞ்செய்தார்
பேட்டிக்குவந்தராசதுரைகள் பெரியசலாஞ்செய்தார்
ஐயாகேளும்ஐயாகேளும் கோங்குபக்கிரியே
இந்தப்புறவியெங்கேபிறந்தது எனக்குச்சொல்லுமையா
ஐயாகேளும்ஐயாகேளும் டில்லிப்துரையேநீ
தெய்வலோகத்துக்குப்பிறந்தகுதிரை தேடிக்கொண்டுவந்தேன்
எனுங்கொடுக்கக்கொண்டுவந்தேன் இந்தப்புரவியைத்தான்

இந்தப்புரவிபேறுகிறராஜர் இந்தவுலகிலில்லை
இதற்கென்றுபிள்ளைபிறக்கப்போகிறு னிந்தவுலகிலேதான்
அந்தமட்டுக்கும்பாராசாரியை யடக்கிவையுமையா
குதிரைசேதியைச்சொல்லிநின்றான் கோங்குபக்கிரியும்

கோங்குபக்கிரி டில்லிபாட்சாவுக்குக் குதிரையைக்கொடுத்
வெகுமதிபெற்றுக்கொண்டது.

அந்தப்பேச்சுக்காதிலேகேட்டான் டில்லித்துரைதானும்
சந்தோஷமாகிப்பக்கிரியவனைத் தழுவிக்கொண்டானும்
என்னுடன்கூடடில்லியில்நீயு மிருந்துபோகவேணும்
விருந்துபொசித்துஎனுங்கேட்பதை வேண்டிப்பாருமைய
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அந்தபக்கிரியும்
அண்ணுவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
குதிரைகொட்டடிகொண்டுபோய்வையும் ராசலிங்கபாபு
கொள்ளுபுல்லுதண்ணீர்கூசாமல்வையும் ராசலிங்கபாபு
அந்தப்படிக்குவுத்தரங்கொடுத்தான் டில்லித்துரைதானும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ராசலிங்கபாபு
அண்ணுவாடாதம்பிவாடா அர்க்காருசின்னையர்
சல்திசல்திதயார்செய்படா அர்க்காருசின்னையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருசின்னையன்
கோடிப்பாகனைக்கூப்பிட்டழைத்தான் அர்க்காருசின்னையன்
குதிரையைக்கொண்டுகொட்டடிசேர்த்தான் அர்க்காருசின்னை
கோடிப்பாகனைக்கொலுவாகவைத்தான் அர்க்காருசின்னையன்
கொள்ளுபுல்லுதண்ணீர்கூசாமல்வைத்தான் அர்க்காருசின்னை
சுற்றிலுந்தருப்புசிப்பாய்வைத்தான் அர்க்காருசின்னையன்
பந்தோபஸ்தாயிருக்குதுபாரு பாராசாரிகுதிரை
டில்லித்துரையும்பக்கிரியவனைச் சேரக்கொண்டுவந்தவர்
விருந்துசெய்துசந்தோஷமாக பேச்சிபென்ன செய்தான்
ஊருபதிகள்நாடுகளெல்லாம் உருதியாய்த்தான்கொடுத்தான்
வேண்டியமட்டுந்திரவியங்கொடுத்து வேண்டிக்கொண்டானு
தங்கமயமாய்ச்சாலுவையொன்று தலைக்குக்கொடுத்தானும்
அந்தவெகுமதிபெற்றுக்கொண்டான் அந்தபக்கிரியும்
அந்தநாள்சென்றுமறுநாளுதைய மாச்சுபாரையா
தங்கத்தகத்திலிருந்து அரசு நனியாசெய்கிறான்
பொன்னின்றகத்திலிருந்து அரசு யொறுமையாய்ச்செய்கிறான்
தகத்திலிருந்துயோசனைசெய்தான் டில்லித்துரைதானும்
அண்ணுவாடாதம்பிவாடா மந்திரிதுரையாரே
இந்தப்புரவிபேறுகிறராஜன் இந்தவுலகிலுண்டோ
(இந்த) பாராசாரிபேறுகிறராஜன் பதுகிக்கிலுண்டோ
(இந்த) புரவிபேறுகிறராஜதுரையைதான் புகழ்ந்துகாணவேணு
யோசனைசெய்துதெரியச்சொல்லும் என்னுடனேபாபு
அந்தப்பேச்சுக்காதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்

எல்லோருங்கூடியோசனைசெய்தார் அந்தசபையிலேதான்
முதல்மந்திரிராஜலிங்கனு முன்னேயோடிவந்தான்
முழங்கால்மண்டிபோட்டு அவனும் முன்னே சலாஞ்செய்தான்
ஐயாகேளும்ஐயாகேளும் டில்லிப்துரையேநீர்
ஐம்பத்தாறுதேசராஜரை அறிந்துசொல்லுகிறேன்கேள்
எட்டுதிசையிலுமுள்ளராஜ ரிதற்குதவமாட்டார்
கோடிராஜரிருக்கிறாரையா குதிரையேறமாட்டார்
தெரிந்தமட்டுக்குஞ் சொல்லுகிறேன்கேள் டில்லிப்துரையேநீ
தெற்கேவெகுதூரமிருக்குதையாரு செஞ்சிக்கோட்டைதுருகம்
செஞ்சிதுருகத்திலரசபண்ணினான் சுரூபசிங்குமகாராஜன்
சுரூசிங்குகுமாரனையா தோணிமகாராஜன்
தோணிராசன் தம்பியையா தாணிசிங்குராஜன்
அண்ணனுந்தம்பியும் ஆளுறாரையா அந்தக்கோட்டையைத்தான்
சேதமில்லாமல் ஆளுறாரையா செஞ்சிக்கோட்டையைத்தான்
அவருக்குமிஞ்சியொருவருமில்லை அந்தக்குதிரையேற
பத்துதிக்கிலுமொருவருமில்லை பாராசாரியேற
செஞ்சிராஜனையழைத்தீரானால் தேசியேறிடுவார்
புருஷசிங்கத்தையழைத்தீரானால் பராசியேறிடுவார்

டில்லிபாட்சா ஓலையெழுதி தோணிமகாராஜனையழைத்தது.

அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லித்துரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லித்துரைதானும்
நீயேவாடாநீயேவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்கு பெரியகணக்கப்பிள்ளைவாரும்
செஞ்சிக்கோட்டைக்கு ஓலையெழுதும் கணக்கப்பிள்ளைநீதான்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ரங்கப்பிள்ளைதானும்
சலாமையாசலாமையா தோணிமகாராஜா
டில்லித்துரையும் ஓலையெழுதுகிறான் தோணிமகாராஜா
என்னுடைபேட்டிநீகாணவேணும் எந்தன்மகாராஜா
உன்னுடைபேட்டிநான்காணவேணும் உயர்ந்தசெஞ்சிராஜா
தேசத்துராஜர்பேட்டிக்குவந்தார் தெரிசனஞ்செய்தோமே
உன்னுடைபேட்டிஒருநாளுங்காணோ முத்தயராசாவே
எனமீதிக்தயவுமிருக்குமேயானால் இங்குவரவேணும்
என்மீதில்கோபமிருக்குமேயானால் இங்குவரவேண்டாம்
அந்தப்படியேயெழுதிமுடித்தார் அந்தவோலையிலே
அண்ணுவாடா தம்பிவாடா அர்க்காருபாப்பையா
ஓலையைக்கொண்டுசெஞ்சிக்குப்போடா அர்க்காருபாப்பையா
செஞ்சிசேதிநீதெரிந்துவாடா அர்க்காருபாப்பையா
ஐந்நூற்றுக்காதவழியேயுண்டு அந்தசெஞ்சிக்குமிதற்கும்!
ஐந்நூறுகுதிரைதயாள்ளையடா அர்க்காருபாப்பையர்
இருபதுநாளையில்சேதிசொல்லடா எந்தனுக்கானாலும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்

அன்றிருந்துவெளிப்பட்டானையா அர்க்காருபாப்பையன்
தயாள்மார்க்கமாய்த்தனியேபோறான் அர்க்காருபாப்பையன்
பத்துநாளையில்பழஞ்செஞ்சிசேர்ந்தான் அர்க்காருபாப்பைய
புதுசெஞ்சியில் அரசுபண்ணுகிறான் தேரணிமகாராஜன்
அரசுமுகத்தில்வந்துநின்றானே அர்க்காருபாப்பையன்
முழங்கால்மண்டிபோட்டுஅவனு முன்னேசலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா தேரணிமகாராஜன்
ஓலையைக்கொண்டுகையிலேகொடுத்தான் அர்க்காருபாப்பைய
ஓலைமுகத்தைக்கண்ணாலேகண்டான் தேரணிமகாராஜன்
வந்ததூதனைவரிசையாய்ப்பார்த்தான் தேரணிமகாராஜன்
எங்கேயிருந்துஇங்குவந்தீர் எனக்குச்சொல்லுமையா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அர்க்காருபாப்பையன்
சலாமையாசலாமையா தேரணிமகாராஜா
டில்லியிலிருந்துவந்தேனையா தேரணிமகாராஜா
பாட்சாவுனக்குவோலையெழுதினான் பாருமையாவே
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் தேரணிமகாராஜன்
தம்பிவாடாதம்பிவாடா தரணிசிங்குராசா
டில்லியிலிருந்துசேதிவந்தது தரணிசிங்குராஜா
ஓலையைப்பிரித்துசேதிசொல்லும் தரணிசிங்குராஜா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் தரணிசிங்குராஜன்
ஓலையைப்பிரித்துவாசித்துப்பார்த்தான் தரணிசிங்குராஜன்
டில்லிசேதியைத்தெரியச்சொன்னான் தரணிசிங்குராஜன்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் தேரணிமகாராஜன்
கலகலவென்றுசிரித்தானையா தேரணிமகாராஜன்
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
டில்லிபாட்சாவைக்காணவேபோகிறேன் மந்திரிதுரைமாரே
ஆயிரங்குதிரைதயால்லையுமே மந்திரிதுரைமாரே
அரசுபத்திரம்பார்த்துக்கொள்ளும் மந்திரிதுரைமாரே
அண்ணுடஞ்சேதி அடிக்கடியெழுதும் மந்திரிதுரைமாரே
என்னுடசேதியெழுதியனுப்புகிறேன் எந்தன்மந்திரிமாரே
அரண்மனைபத்திரம் ஆஸ்தானம்பத்திரம் ஐயாமந்திரிமாரே
அந்தப்பேச்சுக்காதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றார் அந்தமந்திரிமாரும்

தேரணிமகாராஜன் மனைவியிடத்துக்குப் போகின்றது.

அரசுகட்டத்து அரண்மனைபோனார் அண்ணனுந்தம்பியுமாய்.
இராணிவாசத்தில்நடந்தாரையா நல்லதுரைமார்கள்
தேரணிராசன்பெண்சாதிஐயா தெய்வராம்பாயி
பத்துமாதங்கெர்ப்பமையா பத்மராம்பாயி
பூரணகெர்ப்பயாளையா புண்ணியராம்பாயி
புருஷனைக்கண்டுபூசைபண்ணினாள் புண்ணியராம்பாயி
பெண்சாதிமுகத்தைக்கண்ணாலேகண்டான் தேரணிமகாராஜன்

மனதுகலங்கியெதிரிலேநின்றான் வந்தமகாராஜன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி
டில்லியிலிருந்துசேதிவந்தது தெய்வராம்பாயி
நான்போய்விட்டுவாரேன்போய்விட்டுவாரேன் புண்ணியராம்பாயி
அந்தப்பேச்சுகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
இன்றுநாளைபோகத்தப்பமென்று இருக்குதேயென்னுதா
என்னைவிட்டுநீரெப்படிப்போறீர் எனதுபிராணநாதா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அந்தமகாராசன்
பெண்சாதிமுகத்தைப்பெருமையாய்ப்பார்த்தான் புண்ணியமகாரா
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி [ஜன்
சடுதியிலென்னைவரவேயெழுதினான் தகத்துமகாராசன்
சிக்கிரமென்னைவரவேயெழுதினான் டில்லிமகாராசன்
போகாதேபோனால்பிழைகள்வருமே புண்ணியராம்பாயி
மூன்றுமாதத்தில்வந்துசேருகிறேன் முத்துராம்பாயி
ஒன்றுக்குமஞ்சவேண்டாம்பெண்ணே உத்தமராம்பாயி
தோழியும்நீயும்சுகமாயிருங்கள் சொகுசுராம்பாயி
பாங்கியுநீயும்பதனமாயிருங்கள் பத்ராம்பாயி
(நான்) போனவுடனே ஓலையெழுதுகிறேன் பொன்னுராம்பாயி
இவடத்துசேதியெனக்குத்தெரியநீ எழுதும்பெண்மயிலே
அந்தப்பேச்சுகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
போய்விட்டுவாரும்போய்விட்டுவாரும் புருஷசிங்கமேநீ

தோணிமகாராசன்டில்லிபட்டணம்வந்துடில்லியைக்கண்டது.

ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறந்தானடந்தார்
செஞ்சியைவிட்டுப்புறப்பட்டானையா தோணிமகாராசன்
அண்ணனுந்தம்பியுங்கூடிநடந்தார் அந்ததேசம்விட்டு
தபால்மார்க்கமாய்வாரானையா தமயன்அண்ணனுமாய்
அதற்குமுன்னமேயெழுதிவிட்டார்கள் அந்தந்ததேசத்தார்க்கு
தேசராசர்கள்வரவேயெழுதினான் டில்லிபதுஷாதானும்
ஐம்பத்தாறுதேசராசர்கள் அடங்கலும்வந்தார்கள்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழவேவந்தார்கள்
டில்லிபட்டணமுழுதிலும்ராசா சூழவிருந்தார்கள்
கொலுவுநிறைந்துயிருக்கிறானையா செஞ்சிதுரைமார்கள்
டில்லியைத்தேடிவாரானையா கோடிதுரைமார்கள்
வரிசையாகவேடில்லிபட்டணம் வந்துபுகுந்தார்கள்
டில்லிதகத்திக்குமுன்னேவந்தார் தோணிமகாராசன்
முழங்கால்மண்டிபோட்டுஅவரும் முன்னேசலாம்செய்தார்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிபதுஷாதானும்
வந்தராசனைக்கண்ணுலேகண்டு வாரும்வாருமென்றான்
சிம்மாதனத்திலிருமென்றானே டில்லிமகாராசன்
சிம்மாதனத்திலுட்கார்ந்தானையா தோணிமகாராசன்
அந்தநாழிக்குயோசித்தானும் டில்லிபதுஷாதானும்

அண்ணமாரே தம்பிமாரே ராசதுரைமாரே
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் ராசதுரைமாரே
உலகத்திலெல்லாக்குதிரையென்னண்டை ஒடுங்கியிருக்குது
தேசத்திலெல்லாக்குதிரையென்னண்டை திசைதப்பிவந்தது
ஐம்பத்தாறுதேசராசர்கள் அடங்கலும்வந்தீர்கள்
குதிரைசவாரிசெய்யவேணும் சோடிதுரைமாரே
சவாரிசெய்துபெயரிலேவந்தால் தழுவிக்கொள்ளுவேனன்
வழுகளஞ்சியதிரவியமுமக்கு எடுத்துக்கொடுப்பேனன்
புரவியையுமக்குளனுங்கொடுக்கிறேன் புண்ணியதுரைமாரே
வறினராசன்மனையவர்க்கு எனுங்கொடுப்பேனன்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருந்தானெழுந்தார்
தோணிராசனேறுகிறேனென்று திடுக்கிட்டுத்தானெழுந்தார்
ஏறுகிறேனென்றுதைரியமாக எல்லோருந்தானெழுந்தார்
சந்தோஷமாகவெழுந்தாரசனை தைரியமாய்ப்பார்த்தான்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபாதுஷாதானும்
இன்னொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் எந்தன்துரைமாரே
புரவியைக்கண்டுபயப்பட்டானால் பிடித்துக்கொள்ளுவேனன்
தேசிங்கைக்கண்டுபயப்பட்டானால் சிறையில்போடுவேனன்
ஏழுவருஷம்பந்தேகானாவில் இருந்துபோகவேணும்
இந்தப்படிக்குச்சம்மதியிருந்தால் எல்லோருமாருமென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருஞ்சம்மதித்தார்
சந்தோஷமாகவெளியிலேவந்தார் சகலதேசத்தாரும்
சிம்மாசனம்விட்டுக்கீழேகுதித்தான் டில்லிமகாராசன்
முதல்மந்திரிராசசிங்கனும் முன்னேநடந்தானும்
குறைமந்திரிதந்திரிகளுங் கூடவேநடந்தாராம்
குதிரைகொட்டடிவந்துநின்றார்கள் சோடிதுரைமார்கள்
குதிரையைச்சுற்றிப்பார்த்தாரையா கோடிதேசத்தாரும்
வந்தராசாக்கண்ணாலேகண்டது வர்ணமேகக்குதிரை
பார்த்துராசனைக்கனைத்ததுபாரு பாராசாரிகுதிரை
கடகடகடகடகடவென்று கனைத்துக்குதித்ததுபார்
குதிரைகனைத்தசத்தத்தினாலே கொல்லென்றுவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே அலறிவிழுந்தார்கள்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போலே குப்புறவிழுந்தார்கள்
முன்னேயிருந்தராசதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தார்கள்
பின்னேயிருந்தராசதுரைகள் பிரண்டுவிழுந்தார்கள்
தோணிராசன்கண்ணாலேகண்டு திகைத்திருந்தானும்
நாணிசிங்குமேகுதிரையைக்கண்டு தலையைக்குனிந்தானும்
குதிரையைப்பார்த்துபெருமூச்செறிந்தார் கோடிதுரைமாரும்
தலையைக்குனிந்துபெதிரிலேநின்றார் சகலதேசத்தாரும்
எதிரிலேநின்றராசதுரைகளை எறிட்டுப்பார்த்தானும்

கலகலவென்றுநகைத்தானையா டில்லிபதுஷாதானும்
ஐயாகேளும்ஐயாகேளும் ராசதுரைமாரே
குதிரையேறுவோமென்றுசொல்லி குதித்தோடிவந்தீர்
குதிரையைக்கண்டுவிழுந்தசேதியைக் கூவிச்சொல்லுமையா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டார் அந்த துரைமார்கள்
ஐயாகேளும்ஐயாகேளும் தகத்துமகாராஜா
ஊரிலிருக்குங்குதிரைகளென்று ஓடிவந்தோமையா
தேசத்திலிருக்குங்குதிரையென்று தேடிவோடிவந்தோம்
தெய்வலோகத்துப்பாராசாரியை தேவரேறவேணும்
இந்தலோகத்துராசரேறினால் இறந்துபோய்விடுவார்
தப்பித்தவறியேறினாரானால் சதைந்துபோய்விடுவார்
குதிரையைப்பார்த்தால்குடல்நடுங்குது கோசலதேசராசா
தேசியைப்பார்த்தால்திக்குமுக்காடுது டில்லிமகாராசா
பாராசாரியைப்பார்த்தவுடனே பலனுமொடுங்குதுபார்
என்ன ஆக்கினைசெய்தாலும்நாங்கள் ஏறமாட்டோமையா
உயிருடனுங்கள்தப்பிப்பிழைக்க வுத்தாரந்தாருமையா
கோவென்றசத்த மிட்டாரையா கோடிதேசத்தாரும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லிமகாராசன்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுஷாதானும்

இராசர்கள்குதிரையேறாததனால் சிறையிலடைத்தது.

நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் ராசகோடி துரையே
ஐந்துவருஷமென்னண்டைநீங்கள் அடிமைசெய்யவேணும்
ஏழுவருஷமென்னண்டைநீங்கள் இருந்துபோகவேணும்
அந்தப்பேச்சையழித்தீர்களானால் ஆக்கினையையா
அதுநல்லதாகட்டுமென்று அனைவருஞ்சம்மதித்தார்
அன்பத்தாறுதேசராசரும் அனைவருமென்னசெய்தார்
டில்லியில்நடந்தசேதியையெல்லாம் தெரியவெழுதினார்கள்
அந்ததேசர் ஓலைவந்ததை அறிந்துமேகொண்டார்கள்
ஓலையைப்பார்த்துவிசனமடைந்தார் உத்தமஸ்திரீகளுந்தான்
பார்த்துமனதுகலங்கியழுதார் பட்டபுஸ்திரீகளெல்லாம்
அந்தப்படியேவிசனமடைந்தார் அந்ததேசத்திலே
செஞ்சியில்நடந்த சேதியையெல்லாம் தெரியச்சொல்லுகிறேன்
தோணிராசன்போனஏழாநாள் செல்வனுந்தான்பிறந்தான்
பட்டத்தில்பிள்ளைபிறந்தசேதியை பலருமறிந்தார்கள்
பிள்ளைபிறக்கச்செஞ்சிநகரம் புகழ்ச்சியடைந்தார்கள்
மைந்தன்பிறக்கமந்திரிமாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்
குழந்தைபிறந்தநாளுலக்கினம் குறிப்பாயறிந்தார்கள்
குறிப்பையறிந்துசந்தோஷமானார் கொலுவுமந்திரிமாரும்
சந்தோஷமாகித்தானங்கொடுத்தார் சகலதேசத்தார்க்கு
வண்டியில்சர்க்கரைவைத்துவழங்கினர் வந்ததேசத்தார்க்கு
வைகுண்டபதிகள்பிராமணருக்கு உறுதியாய்த்தானங்கொடுத்தார்

நல்லநாள்கொண்டுதொட்டிலும்பிட்டார் ராசனுக்காளுனும்
தொட்டிலும்பிட்டுப்பேருக்கொடுத்தார் தெய்வலோகமறிய
தேசிங்குபாலனென்றுசொல்லி திருஷ்டிகழித்தாராம்
தேசிங்குபிறந்தஇருபதுநாளில் சேதிவந்ததுபார்
சேதியைக்கண்டுதிகைத்தழுகிறாள் தெய்வாம்பாயி
மந்திரிமாருஞ்செஞ்சிசனமும் மனதுகலங்கினார்கள்
ஆண்டுபூண்டபெரியமுதாள் அந்தராம்பாயி
குழந்தைமுகத்தைநீர்காணாமலிப்போ கொடியதேசம்போனீ
மைந்தனழைக்கநீர்கண்டுமகிழ்ந்து மகிழ்ச்சியடையாமல்
டில்லியில்சேர்ந்துசிறையிலகப்பட்டாய் தேசிகனேசுவாமி
இரங்கர்கிருபையப்படியிருந்தால் நானென்னசெய்வேனையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அம்மனுமென்னசெய்தாள்
மைந்தன்பிறந்தசேதியையெல்லாம் வரிசையாய்த்தானெழுதி
தேசிங்குபிறந்தசேதியையெல்லாம் தெரியவேதானெழுதி
ஓலையெழுதிஅனுப்பினளையா உத்தமியம்மாளும்
தோணிராசனைத்தேடியுமங்கே சேதியும்வந்ததுபார்
சேதியைக்கண்டுதிகைத்துநின்றானே தோணியமகாராசன்
ஓலையைக்கண்டுவாடுகின்றானே உத்தமமகாராசன்
இரங்கனைநோக்கிவிசனமடைந்தான் நல்லமகாராசன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அங்கேதானிருந்தான்
செஞ்சியில்பிறந்ததேசிங்குபாலன் சேதியைச்சொல்லுவேன்
பாலன்பிறந்தமூன்றுமாதம் பதைத்துவிழுந்தானும்
குழந்தைபிறந்தஏழாமாதம் குலுங்கவிழுந்தானும்
தொட்டிலைவிட்டுக்கீழேயிறங்கி துள்ளிவிழுவானும்
தங்கத்தொட்டிலையெட்டியுதைத்து தரையில்விழுவானும்
பத்தாமாதம்தவழ்ந்துநடந்தான் பலருமறியவேதான்
அன்னம்பொசிக்கஆடையுடுக்க அப்பவேதானறிந்தான்
தாயின்மடியில்படுத்துவிளையாடி தகப்பனெங்கேயென்பான்
பள்ளிக்குப்போகபடிக்கவெடுக்கப் பாலனுமறிந்தானும்
கொட்டடிசென்றுகுதித்துவிளையாடி தசாமலேவருவாள்
கூடவிருக்குந்துரைகளோடே குதிரையேறிப்போவான்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கஅடிப்பானும்
குதிரையேறிசவாரிநடத்து கோட்டையில்வருவானும்
இரங்கனைக்கண்டுபூசைகள்செய்து நாணயமாய்வருவான்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுந்தானும்
தாயாரெடுத்துமடியில்வைத்து சாந்திகழிப்பாளாம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேயூட்டுவாளாம்
கொஞ்சிக்கொஞ்சிசாப்பிடுவாளையா குழந்தைதேசிங்கு
சாப்பிட்டிளைப்பாறிவெளியிலேவந்து சாடைகள்செய்வானும்
கூடப்படித்தமோவுத்துக்காரனை கூப்பிட்டழைப்பானும்
இருவருங்கூடிகுதிரையேறியே எங்குந்திரிவார்கள்

காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்க அடிப்பார்கள்
புலிகள்கரடிசிங்கத்தைக்கண்டால் புகுந்துவெட்டுவார்கள்
வேட்டையாடிவெளியிலேவந்து வெற்றிகொண்டோமென்பார்
சங்கராபரணிகரையிலேவந்து தாண்டிக்குதித்தாரும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்து குஸ்திகள்செய்வாராம்
ஒருவர்க்கொருவர் உயர்ந்தமேடையில் உருட்டியேதான்குதிப்பார்
மலைகளைத்தூக்கியெறிகிறோமென்று வந்துமோதுவார்கள்
சையதுசாகிபையசலாஞ்செய்து தாண்டிவிழுவார்கள்
மண்டிகள்போட்டுமலைகளைத்தூக்கி வாரியெடுப்பாராம்
மலைகளையோங்கிக்குத்தினாலும் மருந்துபுகைகளவும்
செடிகளையோங்கிக்குத்தினாலும் சிதைந்துமுறிந்துபோகும்
பத்துபனைமரம்உயரங்கிளம்பி பல்டியடிப்பாராம்
மூச்சுபிடித்துகிளம்பிவிழுவார் மூன்றுநாழிவழி
ஆகாசமார்க்கம்அந்தர்பல்டி அடித்துவிழுவாராம்
குன்றுகளேறிக்குதித்தாராலும் குழியாபள்ளமாகும்
பனைமரங்களைத்தூக்கியெடுத்துப் பந்துசெண்டாடுவார்
தேறிந்தெளிந்தான்வித்தைகளாடி தேசிங்குமகிபாலன்
அந்தப்படியேயைந்துவருஷம் ஆடித்திரிந்தானும்
ஆடியலண்டுகோட்டையில்வந்தான் அந்தபாலகனும்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுந்தானும்
தாயாரெடுத்துமடியில்வைத்து சாந்திகழித்தாளே
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேயூட்டினாளாம்
சாப்பிட்டிளைப்பாறிதாயார்முகத்தைத்தனிமையாய்ப்பார்த்தானும்
இலட்சுமிமுகங்கள்கலங்கியிருப்பதை நன்றாய்ப்பார்த்தானும்
அம்மாகேளும்அம்மாகேளும் என்னைப்பெற்றதாயே
உன்னிடமனதில்எண்ணவிசனம் ஒளியாமல்சொல்லுமென்றான்
ஊரிலிருக்கும்பிள்ளைகளுக்கு உதவிமெத்தவுண்டு
தாய்தகப்பனுமிருக்கிறாரம்மா தாயேபெற்றவளே
என்தாயிருக்கஎன்னிடதகப்பன் எங்கேயென்றுகேட்டான்
சல்திஎனக்குத்தெரியச்சொல்லுமே தாயேபெற்றவளே
அந்தப்பேச்சுகாதிலேகேட்டாள் அவனைப்பெற்றதாயும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டாள்
உச்சிமுகந்துதிருஷ்டிகழித்தாள் உத்தமிபெற்றவளும்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிலமேகேளாய்
ஐம்பத்தாறுதேசராஜர்க்கும் அதிபதியானதானும்
டில்லியிலிருக்கும்பெரியபாஷா சேதியனுப்பினார்
சேதியறிந்துவுன்னிடதகப்பன் தோரணிமகாராஜன்
தம்பிதரணிசிங்குராசனை தனியேயழைத்தாராம்
இருவருங்கூடிப்போனாரையா என்தன்கண்மணியே•
போனவிடத்தில்புரவியொன்று புதிதாய்வந்ததாம்
தெய்வலோகத்துபுரவியொன்று திசைதப்பிவந்ததாம்

ஐம்பத்தாறுதேசராஜரும் அடங்கலும்வந்தாராம்
மதப்வலோகத்துப்புரவியேறவே சேதிகள்சொன்னாராம்
ஏறுவோமென்றுதைரியமாக எல்லோரும்வந்தாராம்
கண்ணாலேகண்டிடக்விதுரையும் கடினமாய்சொன்னாராம்
ஏறுமற்போனாலேழுவருஷம் இடுவேன்சிறையிலென்றான்
புரவியைப்பார்த்துபயப்பட்டீரானால்போடுவேன்சிறையிலே
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருஞ்சொன்னாராம்
அந்தப்படியேசத்தியம்பண்ணி அனைவரும்போனாராம்
குதிரையைச்சுற்றிப்பார்த்தவுடனே கொல்லென்றுவிழுந்தாரா
பாராசாரியைப்பார்த்தவுடனே பதைத்துவிழுந்தாராம்
முன்னேயிருந்தராஜதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தாராம்
பின்னேயிருந்தராஜதுரைகள் புரண்டுவிழுந்தாராம்
மூர்ச்சைதெளிந்துராசதுரைகள் முன்னேயோடிவந்தார்
இந்தக்குதிரையேறினோமானால் இறந்துபோய்விடுவோம்
ஏழுவருஷஞ்சிறையிலிருந்து எங்களூருபோவோம்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டு டில்லித்துரைதானும்
ஆனால்நல்லதாகட்டுமென்று அருஞ்சிறைவைத்தானும்
ஐந்துவருஷஞ்சென்றதுபாரு அருமையானமகனே
(இன்னம்) இரண்டுவருஷஞ்சென்றதேயானால் நிமிஷமிருக்கா
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் அலறுஞ்சிங்கம்போலே
பல்லைப்படபடவென்றுகடித்துப் பதறியெழுந்தானும்
கண்கள்நெருப்புப்பொறிகள்பறக்க கனைத்துயெழுந்தானும்
கோபத்தினாலேநெருப்புப்பொறிகள் குப்பென்றெழும்புதா
தாயாரைச்சுற்றிவலமாகவந்து சரணங்கள்செய்தானும்
கும்பிட்டெழுந்துயெதிரிலேநின்று கூசாமல்சொல்லலுற்றான்
எனக்குநீநல்லவரந்தரவேண்டும் என்னைபெற்றதாயே
எட்டுநாளையிலிங்கேவாரேன் என்னைபெற்றதாயே
சலுகியிலென்னையனுப்பிடவேண்டுந் தாயேபெற்றவளே
அனுப்புமென்றசேதிகேட்டு அலறிவிழுந்தாளாம்
இனியென்னசெய்வேனென்கண்மணியே யென்றுமெலிந்தா
கைதனைநெரித்துவயிற்றைப்பிசைந்து கண்ணீர்சொரிந்தாளா
போகிறேனென்றசேதிகேட்டு பூமியில்விழுந்தாளாம்
மகனிடகோபந்தானேயறிந்து மண்மேல்விழுந்தாளாம்
பூமியில்விழுந்துமூர்ச்சையாகினள் புண்ணியராம்பாயி
இங்கேயிருந்தாளனுப்பவேமாட்டாள் என்னைப்பெற்றதாயும
பூமியில்விழுந்ததாயரைப்பார்த்து பின்னிட்டுநடந்தானும
சக்கராபாணியில்ஸ்நானம்பண்ணியே சந்நிதியோடிவந்தான்
இரங்கர்கோவில்புகுந்தானப்பா ராசாதேசிங்கு
இரங்கரைச்சுற்றிவலமாகவந்தான் ராசாதேசிங்கு
கும்பிட்டெழுந்துயெதிரிலேநின்றான் குழந்தைதேசிங்கு,
சவாரிசெய்யவடில்லிக்குப்போறேன் சுவாமிரங்கநாதா

கூடவிருந்துசவாரிசெய்து கொண்டிருப்புமையா
உன்குழந்தைநான்ஊருக்குப்போறேன் உடனேவாருமையா
சக்திசல்லிஸ்வாருமையா சுவாமிரங்கநாதா
அந்தப்பேச்சுவாதிலெகேட்டார் இரங்கநாதசுவாமி
ஆறுல்நல்லதாகட்டும்வாரோன் அருமைகண்மணியே
போய்விட்டுவாடாபோய்விட்டுவாடா புத்தியுள்ளமகனே
(தேசிங்குராஜனும் மோவுத்துக்காரனும் டில்லியட்டணம்வந்தது.)
அந்தப்பேச்சுவாதிலேகேட்டு அடியில்பணிந்தானும்
கும்பிட்டெடுத்துவெளியிலேவந்தான் குழந்தைதேசிங்கு
மோவுத்துக்காரனைக்கூப்பிட்டழைக்க முன்னேஓடிவந்தான்
தன்னுடனேவாடாதரிப்பெவாடா மோவுத்துக்காரா நீ
தெய்வலோகத்துப்புரவியொன்று டில்லியிலிருக்குதாம்
பாராசாரிகுதிரையொன்று பக்கத்திலிருக்குதாம்
ஏனுதகப்பன்தோணிராஜன் அங்கேயிருக்குறாம்
குதிரையேறிசவாரிசெய்துகொண்டுவரவேணும்
சல்திசக்திபுறப்படுமென்றான் மோவுத்துக்காரா நீ
ஆறுல்நல்லதாகட்டுமென்று அதட்டியெழுந்தானும்
கொட்டடிசென்றுகுதிரையிரண்டு கொண்டுமேவந்தானும்
வழிச்செலவுக்குவராலட்சம்பொன் மடியிலேவைத்தானும்
சல்தியாகவேகொண்டுநிறுத்தினான் தபால்குதிரைகளை
குதிரையைக்கண்டுசந்தோஷமாகுன் குழந்தைதேசிங்கு
கோவிந்தாவென்றுகுதிரையேறினா ரிருவருமப்போது
அரிகரியென்றுஅதட்டியேறினார் இருவருமப்போது
எறிவுடனேவெள்ளிக்குமுடா எடுத்துஅடித்தார்கள்
அடித்தவுடனேஐந்துநாள்பயணம் அரைநடந்தது
பத்துநாளையில்வந்துசேர்ந்தார் பாலரிருவருந்தான்
டில்லியிற்சேர்ந்துதெருவில்நடந்தார் தேசிங்குபாலகனும்
கோட்டையெல்லாந்தாண்டியேவாரான் குழந்தைதேசிங்கு
சிங்காரமேடையிலேவந்துசேர்ந்தான் சிங்கக்குட்டிபோலே
அந்தவேளையிலென்னசெய்கிறுன் டில்லித்துரைதானும்
தங்கத்தகத்திலிருந்தேயானை தனியாய்ச்செய்கிறுனும்
பொன்னின்தகத்திலிருந்தாக பொறுமையாய்ச்செய்கிறுனும்
சுற்றிலும்ராசதுரைகள்கோடி சூழவிருந்தார்கள்
நற்புத்தியுள்ளமந்திரிமாரும் நடுவேயிருந்தார்கள்
ஐம்பத்தாறுதேசத்துராசரும் அருகிலிருந்தார்கள்
சிறையிலிருக்குமிராசதுரைகள் சேரவிருந்தார்கள்
தோணிராசன்தானுமிங்குமே சேர்த்திருந்தார்கள்
சொலுநிறைந்தராஜதுரைகள் கொல்லென்றிருந்தார்கள்
அந்தச்சமயம்வந்துபுகுந்தானும் அலைறுசிங்கம்போலே
பாலசூரியனுதித்தாற்போலே பளிச்சென்றுசார்ந்தானும்
கோடிசூரியனுதித்தாற்போலக் குப்பென்றுசார்ந்தானும்

வானத்திலிருக்குஞ்சூரியனைப்போல் வந்துநுழைந்தானும்
கோடிமன்மதனாயிருந்து கொலுவுக்குவந்தாற்போல்
நிறைந்தகொலுவில்வந்துநின்றானே ராசாதேசிங்கு
கொலுவிலிருக்கும்ராஜதுரைகள் குப்பென்றெழுந்தாராம்
சபையிலிருக்கும்ராஜதுரைகள் சட்டென்றெழுந்தாராம்
தகத்திலிருக்கும்டில்லிப்துரையும் தானுமெழுந்தாராம்
எழுந்தாசனைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு

தேசிங்குராஜனும் மோவுத்துக்காரனும் டில்லித்துரையைக் கண்டது.

சலாமையாசலாமையா டில்லித்துரையேகேள்
உன்தேசத்திலுயர்ந்தபுரவி உன்னண்டையிருக்குதாம்
பாராசாரியைசவாரிசெய்யும் பாலன்வந்தேனென்றான்
ஏறிசவாரிசெய்வதற்காக இங்கேவந்தேனென்றான்
புரவியேறிசவாரிசெய்துநான் போகவேணுமென்றான்
மானமிடிந்துவிழுந்தாற்போல மைந்தன்சொல்லிநின்றான்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அவனுஞ்சொல்லிநின்றா
சொன்னசொல்லைக்காதிலேகேட்டான் டில்லித்துரைதானு
சுற்றிலுமிருக்கும்ராசதுரைகளைச் சுற்றியேபார்த்தானும்
சித்திரப்பதுமைபோலேயிருக்கிறார் தேசராசரெல்லாம்
ஒருவர்முகத்தையொருவர்பார்த்தே தேங்கியிருந்தார்கள்
டில்லித்துரையுங்கண்ணாலேகண்டு சேதிசொல்லலுற்றான்
எதிரிலிருக்கும்தேசிங்குபாலனையேறிட்டுப்பார்த்தானும்
மன்மதன்போல்அழகுகுழந்தையை மண்மேற்பார்த்தானு
(டில்லித்துரை தேசிங்குராசனுடைய வளப்பத்தைக்கே
ஐயாகேளும்ஐயாகேளும் அறியாதபாலகனே
எந்ததேசத்திலிருந்துநீயு மிங்கேதேடிவந்தாய்
உந்தனூரும்பேருமேதும் உன்தகப்பன்பேரும்
தவமாய்ப்பெற்றதாயின்பேருஞ் சடுதியில்சொல்லுமென்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான் அலருஞ்சிங்கம்போ
சொல்லுறேன்கேளும்சொல்லுறேன்கேளும் டில்லித்துரை
தெற்கேவெகுதூரமிருக்குதுபார் செஞ்சிக்கோட்டைநகர்
செஞ்சிக்கோட்டையாளும்ராசன் தோரணிமகாராஜன்
தோரணிராசன்குமாரன்தான் தேசிங்குமகிபாலன்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்
குதிரையேறவுமையில்லாமல் கொலுவிலிருக்கிறாராம்
குதிரையேறிசவாரிசெய்துதான் கொண்டுபோகவந்தேன்
சல்திசல்திகுதிரைகொண்டா டில்லித்துரையேநீ
கொல்லுஞ்சிங்கக்குட்டியைப்போல சீறியேநின்றானும்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் டில்லிமகாராசன்
தோரணிராசனைதிரும்பியேபார்த்தான் டில்லித்துரைதானு
தோரணிராசன்காதிலேகேட்டு தேடியேவந்தானும்

சிற்றப்பனுமா தாணிசிங்குமே தேடியோடிவந்தார்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
சந்தோஷமாகத்தழுவியெடுத்து சாந்திகழித்தாராம்
சேர்த்துத்தழுவிமகனையெடுத்து திருஷ்டிகழித்தாராம்
ஐம்பத்தாறுதேசராசர்கள் அதிசயப்பட்டாராம்
டில்லிபதுஷாவுஞ்சந்தோஷமாகி சேரவோடிவந்தார்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேளாப்
மைந்தன்சொல்லைக்கேட்டுநீயுமகிழ்ச்சிபடையாமல்
உந்தன்வலுமைசொல்லைக்கேட்டு வுள்ளமிகமகிழ்ந்தேன்
பெற்றதாயுமுன்னைப்பிரிந்து பின்னுயிர்வைப்பாளா
அரசனைக்கேட்டுசெஞ்சிக்குப்போவோம் அருமைகண்மணியே
மனுவுங்கேட்டுநான்வருகிறேனப்பா வாருங்குழந்தையென்றான்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டா னழகுபாலகனும்
கலகலவென்றுசிரித்தெழுந்தான் கதும்புஞ்சிங்கம்போலே
ஐயாகேளும் ஐயாகேளும் என்னைப்பெற்றராசாவே
குதிரையேறப்பயப்பட்டுநீங்கள் கொடியசிறையிருந்தீர்
பாராசாரியேறப்பயந்து பாரச்சிறையிருந்தீர்
ஏறிசவாரிசெய்துநானுமே யிட்டுப்போகிறேன்பார்
குதிரையேறிசவாரிசெய்துநான் கொண்டுபோறேனென்றான்
சற்றுநேரத்தில்சவாரிசெய்து சிறைமீட்டுபோறேன்
போகாமற்போனாலுந்தன்வயிற்றிற் பிறந்ததுயென்னத்திற்கு
அந்தவார்த்தைதனைக்காதிலேகேட்டு அலறிவிழுந்தாராம்

தேசிங்குராசன் குதிரையேறுதல்,

கனைத்துகதும்பிவெளியில்வந்தான் காளைசிங்கம்போலே
குதிரையிருக்குங்கொட்டடிதேடி குதித்துவோடிவந்தான்
ஓடிவருகிறராசனைக்கண்டு உறும்பியெழுந்ததுபார்
தேடிவந்தராசனைக்கண்டு திகைத்துகனைத்ததுபார்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலே அலறிகனைத்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போலே குலுங்ககனைத்ததுபார்
நாற்றிசையுங்கலங்கியங்[illegible] நடுக்கங்கொண்டதுபார்
ஐம்பத்தாறுதேசராசர்கள் அதிர்ந்துவிழுந்தார்கள்
குழந்தைகுழந்தையென்றுசொல்லி கூவிவிழுந்தார்கள்
டில்லிபதுஷாவுந்தோணிராசனும் திகைத்துவிழுந்தாராம்
விழுந்தவுடனே குழந்தையென்று வோடியேவாரார்கள்
அந்தவேளையிலென்னசெய்கிறான் ராசாதேசிங்கு
கனைத்தகுதிரையைக்கண்ணாலேகண்டு கடுகவோடிவந்தான்
குதிரையைத்தட்டிசலாம்வாங்கினான் கொல்லுஞ்சிங்கம்போலே
அண்ணுவடாதம்பிவாடா மேவுத்துக்காரா நீ
சல்கயிற்றைகழுத்துக்கயிற்றை கடுகஅவிழுமென்றான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் மேவுத்துக்காரனும்
சொன்னவுடனேசல்லியாப்பாய்ந்து சருக்காயறுத்தானும்

தங்கத்தாலேசீனிபோட்டுத் தடவிகொடுத்தானும்
அந்தக்குதிரையைக்கண்ணாலேகண்டு அகமகிழ்ந்தானும்
ஹரிஹரிபரந்தாமவென்று அலறியெழுந்தானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணாவென்று கும்பிட்டெழும்பியேதான்
பாராசாரியைச்சலாம்வாங்கிப் பாய்ந்தேறினானும்
புலிக்குட்டிபோலேபாய்ந்து அவனும்புரவியேறினானும்
ஏறினவுடனேபாராசாரியும் என்னசெய்யுதுபார்
தடதடதடதடதடவென்று தவிக்குதுபார்குதிரை
திடதிடதிடதிடதிடவென்று திளப்பிக்குதிக்குதுபார்
லகானைபிழுத்துகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
ஐயாகேளும்ஐயாகேளும் என்னைப்பெற்றவரே
பாவிபேதிசவாரிபோறேன் பெற்றவரே ஐயா
தப்பித்தவறிவந்தேனானால் தழுவிக்கொள்ளுமையா
மாண்டுமடிந்துபோனேனேயானால் மனதுகலங்காதே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு யிருக்குதுதகப்பனே
என்றைக்கிருந்தாலுமண்ணுக்கிரையாகிறதேயுடம்பு
ஒன்றுக்குநீரஞ்சவேண்டாம் உறுதிகொள்ளுமையா
சொன்னசொல்லைக்காதிலேகேட்டார் தேசராசாக்கள்
ஐம்பத்தாறுதேசசனமும் அடங்கலுங்கேட்டார்கள்
மகனேமகனேயென்றுசொல்லி வாய்விட்டழுதார்கள்
டில்லிபதுஷாயுந்தோரவிராசனும் தேற்றியிருந்தார்கள்
சிற்றப்பதுஷாதரணிசிங்குமே தேற்றியிருந்தாராம்
மகனேயென்னசெய்வோமென்று வயிற்றிலடித்தார்கள்
போகாதேபோகாதேமகனே புரவிமேல்போறே
இந்தலோகத்துப்புரவியல்லவே பெற்றகண்மணியே
தெய்வலோகத்துப்புரவியாச்சே தேசிங்குமகனே
உயிருடனுன்னைவிட்டுப்பிரிந்து உலகத்திலிருப்போமோ
பிறந்தபோதேயிறந்துபோனால் பெற்றோர்க்கில்லை
ஐந்துவருஷம்வளர்த்தமாதா அன்னைக்கேசகாயன்
அதற்குமுன்னமேபெற்றதனயநீரும் இனிபோனாலாருதப்பா
குதிரையைப்பார்த்தால்பயங்கரனுடே குறுக்கேதெய்வமகனே
ஐந்துவருஷம்பாலனுக்குதே அறியாதபெண்மகனே
குதிரையைவிட்டுக்குதித்துவாடா எழுந்தவென்மகனே
என்னுயிர்பூமியில்தரித்திருக்கநீ பிறந்தவியாகுமனே
அந்தமொழியைக்காதிற்கேட்டான் அதிருபதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா கும்புப்பரியாலே
இங்கேயிருந்தாலென்னகவலை எனக்குத்தேறுபோர்தான்
என்றுநினைத்துயோசனைசெய்தான் ராசாதேசிங்கு
கோவிந்தாகோவிந்தாவென்று குதிரையைத்தட்டிவிட்டான்
ஹரிஹரிஸ்ரீமுகுந்தாவென்று அஸ்வத்தைத்தட்டிவிட்டான்
தட்டினதட்டிற்குதிரைகிளம்பி தளாயிலேறினாமல்

ஆகாசமார்க்கம்வந்துபாயுது அந்தமேகக்குதிரை
ஆகாசமார்க்கத்தைபண்ணூந்துபார்த்தார் அரசர்களெல்லாரும்
சூரியன்போலத்துலங்குதுபாரும் சொர்ணமேகக்குதிரை
கண்டதூரம்பார்த்துராசர்கள் கலங்கிநின்றார்கள்
பாப்பிராகுதிரையைக்கண்ணுற்கண்டு பரதவித்திட்டார்கள்
மேகமண்டலந்தாவிவருவதைப் பார்த்தான்தேசிங்கு
லகானையிழுத்துசிட்டிகொடுத்தான் ராசாதேசிங்கு
சிட்டிகொடுத்தவேகத்திலே சிறிப்பாய்கிறதாம்
கோபம்வந்துமூண்டுக்கொண்டது குதிரைக்கப்போது
காடுமலைகள்செடிகளெல்லாங் கலங்கிநடுங்கிடவே
மலைகளேரிகள்தாண்டிக்குதிரை விரைவாய்ப்போவதினால்
மலைகளிடிந்துதவிடுபொடியாய் மண்மேல்விழுந்திடவே
குன்றுகள்கற்கள்தாண்டிகுதிரை குதித்தேறிப்போகிறதாம்
குன்றுகளெல்லாம்பொடிபொடியாகக் குலுங்கவிழுகுதுபார்
குதிரைபோகும்வேகத்திலே குளமுமலைகளெல்லாம்
குப்பென்றைங்காதவழியிற்சென்று கொண்டுசாடுகிறதும்
ஆறுகுளங்காடுமேடுகளெல்லாம் அதிரநடுங்குதுபார்
ஐங்காதவழிக்குஅப்பாலிருக்குது அழகுள்ளகுதிரையும்
ஐங்காதவழிதாண்டிக்குதிக்குது அந்தமேகக்குதிரை
குதிரைதாண்டினவேகத்தாலே குழந்தைதேசிங்கு
குலுங்கநகைத்துசிட்டிகொடுத்தான் குதிரைக்காலும்
நிமிஷநாழிகைக்குள்ளாறுகாதம் நிலையாய்ப்பறக்குதுபார்
ஐந்நூறுகாதத்துக்கப்பட்டதேசம் அரைச்சணத்திற்செல்லுது
அனைச்சார்ந்தகாடுமலைகள் ஒடுங்கிநடுங்குதுபார்
காட்டிலுள்ளகாடுபுலிகள் கலங்கிநடுங்குதுபார்
குகையிலிருக்குஞ்சிங்கம்யானை குலுங்கநடுங்குதுபார்
தேசத்திலிருக்குஞ்செனங்களெல்லாம் திகைப்புற்றுநடுங்குதுபார்
ஐந்நூறுகாதம்பஞ்சபுரவி ஆகாசம்போகுதுபார்
ஆகாசம்போகும்வேகத்தாலே அலையுதுலகமெல்லாம்
மேகங்களும்பிளவையத்திறந்து மின்னலைக்குதுபார்
மின்னல்வெளிச்சந்தன்னிற்பாயுது மேகமானகுதிரை
தேவர்களெல்லாம்மனதுபயந்து திகைத்திருந்தார்கள்
இருந்தவிடத்தைவிட்டேயவர்கள் இறங்கிபோய்விட்டார்
உயர்ந்தமண்டலம்விட்டேயவர்கள் ஒதுங்கிபோனார்கள்
வடக்கேவெகுதூரமாம்மேருசாரலில் வந்துபாய்ந்ததுபா
குதிரைபோகும்வேகத்தாற்பூமி குலுங்கநடுங்குதுபார்
பர்வதங்கள்படபடவென்று பதறிநடுங்குதுபார்
சாரல்வாழுமுள்ளமலைகள் சிதைந்துநடுங்குதுபார்
மகமேருசாரல்நாற்றிசைதன்னில் வந்துபாயுதுபார்
அங்கிருந்துமேகுதிரையைத்திருப்பினா னந்தபாலனும்
தெக்குஅமராபர்வதத்தைத் தேடிப்போயுதுபார்

லங்கையை நாலுசுற்றாகத்தான் நடக்கக்கொண்டுவாரான்
நாற்றிசைகளுஞ்சக்கரம்போலே நடக்கக்கொண்டுவாரான்
பூமியிலுள்ளசெந்துக்களெல்லாம் பொறிகலங்குதுபார்
வானத்திலிருக்கும்மேகபந்திகள்பதிமயங்குதுபார்
மக்கெலதுனாந்திரும்பி மேலண்டைகொண்டுவாரான்
ஐந்துநாளும்பிராப்பகலாக அதிரவேகொண்டுவாரான்

குதிரைதேசிங்குராசனை மோசஞ்செய்தது.

பாராசாரிமனமுங்கலங்கி பார்த்துநிமிர்ந்ததுபார்
என்னுயிர்வாங்கவந்தபாலகன் எங்கேசென்மித்தானோ
இங்கேயிருந்தாவிரண்டுநாழிகையில் இறக்கவடிப்பானே
பூமியிலிருந்தாற்சீவனிப்போது போய்விடுமேயிரிக்கு
ஒப்பாதபிண்டம்தேசிங்குபாலன் ஓட்டியேகொல்லுவானே
ஜீவனெழும்பிதெய்வலோகந்தேடிபோகுதுபார்
ஆகாயமார்க்கமட்டுங்கிளம்பிப் போகுதந்தக்குதிரை
புரவிபோகும்வேகமறிந்தான் புலிக்குட்டிதேசிங்கு
தெய்வலோகந்தன்னிலடக்கத் தேடிபோகுதென்றும்
ஆகாசமார்க்கங்கொண்டடிக்க அதிரவேபோகுதென்று
லகாணிழுத்துசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
இடதுகாலுக்கிரண்டுசிமிட்டா இடுக்கிக்கொடுத்தானும்
சிமிட்டாகொடுத்தவேகத்தினாலே திகைத்துநின்றதுபார்
இடித்தஇடியின்மனதுகலங்கி யிருந்துமேபாடுதுபார்
ஆகாசமார்க்கந்தத்தளிக்குது அந்தமேகக்குதிரை
அந்தநாட்டையிந்தநாட்டை அசையாமலேபிடித்து
நாலுதிக்குந்திரும்பிப்பார்த்தான் ராசாதேசிங்கு
ஊருபதிகள்நாடுகளெல்லாம் ஒன்றுந்தெரியவில்லை
அன்னம்புசித்து ஐந்துநாளாச்சுது அந்தபாலகனும்
ஆகாசம்பூமியொன்றாயிருப்பதை யறிந்தபாலகனும்
கலைகள்வந்துசூழ்ந்தவுடனே கண்டுமேபேதுசெய்தான்
கடிவாளக்கயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்துக்கவிழ்ந்துபடுத்த
குதிரைக்கயிற்றைக்கெட்டியாய்ப்பிடித்துக் குப்புறப்படுத்தா

தேசிங்குராசன்ஸ்ரீரங்கநாதனைநினைத்தல்.

ஹரிஹரிபரந்தாமாவென்று அலறியழுதானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணாவென்று கூப்பிட்டழுதானும்
ஆபத்பாந்தவா அனாதிரட்சகா ஆதிமூலப்பொருளே
அடியேனைவந்துஇரட்சியுமையா ரங்கநாதாவென்று
அலறியழுதுகவிழ்ந்துபடுத்தான் அந்தக்குதிரைமீதில்
கண்ணைமூடிக்கவிழ்ந்துபடுத்தான் ராசாதேசிங்கு

ஸ்ரீரங்கநாதர் தேசிங்குராசனிடத்தில்வந்தது.

அழுதவுடனேஸ்ரீரங்கநாத ருகில்வந்துநின்று
கடிவாளத்தின்கயிற்றைப்பிடித்துக் கன்னத்திலறைந்தாரும்
குழந்தையைக்கொண்டு ஆகாசமார்க்கம் சொல்லநினைத்தாரே

இன்றையவரையிலாகாசமார்க்கம் எழும்பிப்போகவேண்டாம்
கூடவிருந்துதேசிங்குபாலனைக் கொலுவில்கொண்டுவாரும்
கொஞ்சநாளையிச்சண்டைநேரும் குழந்தைக்கானாலும்
சண்டைமுனையில்மோட்சமுனைக்குச் சலிதராரோமென்றார்
குழந்தையுடனேமோட்சமுனைக்கு கூடதாரோமென்றார்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அடிபணிந்ததுபாரும்
சந்தோஷமாகவையனைக்கண்டு சாஷ்டாங்கமாகுதுபார்
தேசிங்குசொல்லியாகாசமார்க்கஞ்சேரக்கொண்டுவந்தார்
டில்லிக்குநேரேகொண்டுநிறுத்தினார் தேசிங்குபாலகனை
குழந்தையையெடுத்துக்குதிரைமீது கூசாமல்வைத்தாராம்
அஸ்தம்படவேசனைகள்தெளிந்து அதட்டியெழுந்தானும்
கனைகள்தெளிந்துகண்ணைவிழித்துக் கர்த்தனைப்பார்த்தானும்
பார்த்தவுடனேயானந்தமாக பதறியழுதானும்
ஆபத்பாந்தவா அநாதரட்சகா ஆதிமூலமே நீ
அடியேனைவந்துரட்சித்தீரோ ஐயாரங்கநாதா
இனிநடக்கும்புத்தியென்னமோ யெனக்குச்சொல்லுமையா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டார் ரங்கநாதசுவாமி
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
டில்லிக்குநேரேயிருக்குதுபாரு தெய்வலோகபுரவி
குதிரையிறங்கிச்சந்தோஷமாகக் கோட்டைக்குவாருமென்றார்
தேசிங்குயிறங்கிவெகுமதிபெற்று செஞ்சிக்குவந்துசேரும்
போய்வாரேன்போய்வாரேனிப்போ புத்தியுள்ளமகனே
ஆனால்நல்லதாகட்டுமென்று அடியில்பணிந்தானும்
பணிந்தவுடனேமாயமாய்ரங்கர் பரவியிருந்தாராம்
(தேசிங்குராஜன்குதிரையைடில்லியிற்கொண்டுவந்து இறங்கியது.)
போனவுடனேதேசிங்குபாலன் புரவியையென்னசெய்தான்
மெள்ளசிமிட்டாகொடுத்துக்கொண்டு மெதுவாய்வாரானே
பச்சஞ்சிமிட்டாகொடுத்துக்கொண்டு பாலன்வாரானே
கலகலகலகலகலகலவென்று கனைத்துவருகுதுபார்
கனைத்தசத்தத்தைக்காதி[ல்]கேட்டார் கன்னடத்தேசத்தாரும்
ஐம்பத்தாறுதேசராசரும் ஆகாசமேபார்த்தார்
சூரியனைப்போற்றுலங்கிவருகுது சொர்ணமேகக்குதிரை
சந்திரனைப்போலதகதகவென்று சாரிவருகுதுபார்
வருகிறபாலகனைக்கண்ணாற்கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தோணிராசனும்டில்லிப்பதுஷாயுந் தேடிபோயிவந்தார்
ஆனந்தகண்ணீர்புஷ்பமாரியாய் அலறியழுதார்கள்
சந்தோஷம்வந்துகூண்டுகொண்டது சகலதேசத்தார்க்கும்
அந்தசமயத்தில்வந்துநிறுத்தினான் அறியாதபாலகனும்
பாரசாரியைக்கொண்டுநிறுத்தினான் பாலசூரியன்போல்
நிறுத்தினவுடனேபுஷ்பமாரிகள் நிலைபாய்ப்பொழிந்ததாம்
தேவர்களெல்லாஞ்சந்தோஷமாகத் தேன்மாரிபொழிந்தார்கள்

தோணிராஜுந்தாணிசிங்குமே சேலோடிவந்தார்
வந்தமகனைக்கண்ணாலேகண்டு வாரியெடுத்தாளும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டான்
தேசிங்குபாலனைமடிமீதில்வைத்து திருஷ்டிகழித்தாளும்
சந்தோஷமாகமகனையெடுத்து சாந்துகழிக்காளும்
ஐம்பத்தாறுதேசராஜரும் ஆசீர்வதித்தாரமே
மங்களம்பாடிவாழ்த்தியெடுத்து மைந்தனைமுத்தமிட்டார்
டில்லிபதுஷாவுஞ்சேனைசேரும் சேலோடிவந்தார்
முழங்கால்மண்டியிட்டேயவர்கள் முன்னேசலாஞ்செய்தார்
ராமுராமுமோசித்தாராமுமே ராசாந்தேசிங்கு
பதில்சலாமுங்கொடுத்தானையா பாலனெழுந்திருந்து
உடனுங்குடிக்கதனமாகவந்து உகந்துசலாஞ்செய்தார்
கையமர்த்திமரியாதைசெய்தான் கனிகுழந்தையவன்
எல்லோருங்கூடியரண்மனைவந்தார் ஏககாலத்தில்
வந்தவுடனேவிருந்துகளுண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
குதிரைக்குவேண்டியபுல்லுந்தண்ணீர் கூசாமல்வைத்தார்கள்
சபையில்வந்துநிறைந்துகொண்டார் சபைதேசத்தாரும்
டில்லிபதுஷாவுந்தேசிங்குராசனைச் சேர்த்துஅணைத்தெடுத்து
உயர்ந்தசிங்காதனத்தில்வைத்து ஒப்பங்கலதிரான்
அண்ணாவாடா தம்பிவாடா ராசவேங்கையாபு
பத்துகளஞ்சியபணத்தையெடுத்து பகுதிகட்டுமென்றான்
குதிரையர்பிரம்பாலேயாயிரம் கொண்டுநிறுத்துமென்றான்
கணக்கில்லாதசேனைதளத்தை கட்டிநிறுத்துமென்றான்
தேசிங்குக்கேத்தமாணிக்கவுடுப்பு தேடிக்கொண்டுவாருங்கள்
மாணிக்கமாலைமுத்தாரங்கள் வரிசைகொண்டுவாருங்கள்
தெய்வலோகத்துப்பாராசாரியைத் தேடிக்கொண்டுவாருங்கள்
தேசராசர்க்குங்காணிக்கையைத் தேடிக்கொண்டுவாருங்கள்
தானென்றும்புரவிநீலவேணியை தூக்கிவாருமென்றார்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டார் ராஜவிங்கபாபு
சொன்னமுழுக்குதயாராக்கிசது ருத்திரகொலுங்களிலே
தயாராகவுடனுடனேஆண்டு டில்லிபதுஷாதானும்
முத்தாரமும்மாணிக்கமும் முன்னேயழுத்திப்போட்டான்
தேசிங்குக்கேற்றவுடுப்புகளுஞ் சேர்த்துக்கொடுத்தானும்
தோணிசிங்குந்தாணிசிங்குந் தேடியோடிவந்தார்
அவரவர்க்கேற்றவெகுமதியெல்லாம் அன்பாகத்தான் கொடுத்தான்
ஐம்பத்தாறுதேசத்தாசர்க்கும் அடங்கலுந்தான்கொடுத்தான்
தேசிங்கிலிருக்குமவனைத் திருஷ்டிசுத்தித்தான்பார்த்தான்
மோவுத்துக்காரனைக்கண்ணாற்கண்டு முன்னேயோடிவந்தான்
முக்காலமுத்தாரங்கள் முன்னேமுத்திரப்போட்டான்
அவனுக்கேற்றவெகுமதியெல்லாம் அங்கேகொண்டுவைத்தான்
ஐயாகேளும் ஐயாகேளும் மோவுத்துக்காரனே

நானேறும்புரவிநீலவேணியை நீயேறவேணுமென்றான்
ஐம்பத்தாறுதேசத்திலுள்ள அரசருமேறமாட்டார்
ஏறினால்நீயேறவேணும் என்னென்றுநீகேளாய்
பன்குராந்தறிந்துளனுமாய் உனக்குத்தந்தேனென்றார்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமொத்துக்கொண்டான்
தேசிங்குராஜன்கண்ணாலேகண்டு சேதியென்னசொல்லுகிறான்
ஐம்பத்தாறுதேசத்தரசர்க்கும் அதிபதியென்றானே
எனக்குமிஞ்சின அதிபதியாக யிருந்து அரசுசெய்யும்
என்மகளைராணியம்மாளை இங்கேதந்தேனென்றான்
கல்யாணஞ்செய்தாசமுகத்தைக் காத்துக்கொள்ளுமென்றான்
இப்போதிஷ்டமோ அப்போகல்யாணஞ் செய்துகொண்டுபோமே
நீயிட்டவேலைதலைபாக்செய்வே நிட்சயமாகவையா [என்றான்
அவ்வார்த்தைதனைக்காதிற்கேட்டான் அறியாதபாலகனும்
கோவிந்தாகோவிந்தாவென்று குப்பென்றெழுந்தானும்
டில்லித்துரையைச்சேர்த்தணைத்து சேதியென்னசொல்லுகிறான்
ஐயாகேளும்ஐயாகேளும் டில்லித்துரையே நீ
சமஸ்தானத்தையறியாதவனும் தான்குமரனையா
செஞ்சியைவிட்டாறுமாதமாச்சுது செலவுதாருமையா
அம்மொழியைக்காதிற்கேட்டான் டில்லித்துரைதானும்
வாரியெடுத்துமார்பிலணைத்து வர்ணமுத்தமிட்டான்
அந்தமொழியைக்காதிற்கேட்டான் தோணிராஜனும்
ஐயாகேளும்ஐயாகேளும் டில்லித்துரையே நீ
இந்தவருஷப்பாலனுக்கு அறியாதபெண்குழந்தை
இப்போதுகல்யாணஞ்செய்ய எனக்குச்சம்மதியில்லை
இருபதுவயதில்கலியாணஞ்செய்து இட்டுக்கொண்டுபோறேனென்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுமேசம்மதித்தான்

(டில்லிராஜன் தேசிங்குராஜனுக்கு வெகுமதிகொடுத்தல்.)

அன்றுவாடாதம்பிவாடா ராஜலிங்கராயா
திவ்வியசேனையானைகுதிரை செஞ்சிகொண்டுவந்துசேரும்
என்றைக்குஞ்செஞ்சிதோப்புறுபணமும்இல்லையென்றுசொல்லும்
ஐம்பத்தாறுதேசராஜாக்களையும்பார்த்து
செஞ்சிராஜனுக்கிறையீண்டுபோங்கள் தேசராஜர்களே
போய்வாரோம்போய்வாரோம்தாங்கள் புண்ணியதுரையாரே
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவரும்வந்தாராம்

தேசிங்குராஜன் செஞ்சிகோட்டைவந்து சேர்ந்தது.

தோணிராஜனுஞ்சிற்றப்பனையும் தெருவிலேவந்தாராம்
மோவுத்துக்காரன்நீலவேணியின்மேல் முன்னேவந்துநின்றான்
தோணிராஜனுஞ்சிற்றப்பனையும் தேசியேறினார்கள்
பிறகேயிருந்தராஜதுரைகள் புரவியேறினார்கள்
அவரவருடையதேசத்தினிலே பரவிப்போய்ச்சேர்ந்தார்
செஞ்சிக்கோட்டையில்வந்துசேர்ந்தார் தேசிங்குராஜனும்

வருமுன்னமேசேதியறிந்து வருத்தியேபெற்றவளும்
ஆயிரந்தோழிமார்களுடனே அங்கேவந்துநின்றாள்
வந்தவுடனேதாயைக்கண்டு வணங்கிநமஸ்கரித்தான்
வந்துபணிந்தமகனையெடுத்து வாரியேமுத்தமிட்டாள்
ஆயிரந்தாதிகள்வந்தெழுந்து ஆலாத்தியெடுத்தார்கள்
திருஷ்டிகழித்துமங்களதிருஷ்டி தெருவிலெறிந்தார்கள்
முக்கனிசர்க்கரையாலமுதுடனே முன்னேவட்டித்தார்கள்
மகனையெடுத்துமடிமீதில்வைத்து மகிழ்ச்சியடைந்தார்கள்
என்னைவிட்டுநீயெப்படிபோனாய் எந்தன்கண்மணியே
போனநாள்முதலின்றையவரையில் பொசிப்புமெடுத்ததில்லை
தாயுந்தகப்பனுமைந்தனைப்பார்த்துச் சந்தோஷமானார்கள்
ஏழுவருஷஞ்சந்தோஷமாக யிருந்தரசுசெய்தார்
ஏழுவருஷங்களானபின்பு இளவரசுதான்றரித்தார்
பட்டங்கட்டினமூன்றுமாதத்தில் பாலனைப்பெற்றவளும்
பரமபதத்தைப்போயடைந்தாள் பாக்கியரம்பாயி
தேசிங்குபிறந்தவெட்டாம்வருஷம் தோரணிமகாராசன்
பரமதியானஞ்செய்தேயவரும் பரகதியைச்சேர்ந்தார்
சிற்றப்பனுதாரணிசிங்கு செஞ்சியையாண்டிருந்தார்
பதினெட்டுவயதுபாலனான ராசாதேசிங்கு
கல்யாணஞ்செய்யயத்தனித்தார் கண்மணிபாலனுக்கு
சிற்றப்பனுதாரணிசிங்கு தேடியென்னசெய்தார் [ன்
டில்லிக்குச்சென்றுராணியம்மாளைச் செஞ்சிக்குக்கொண்டுவந்தா

தேசிங்குமகாராஜன் திருக்கலியாணஞ்செய்தல்,

ஆறுமாதமாய்க்கலியாணம்பண்ணி அறையில்வைத்தார்கள்
ராணிதேவியைக்கலியாணம்பண்ணி ராஜமுடிதரித்தார்
திரைகட்டிகலியாணஞ்செய்தார் செஞ்சிகோட்டையினில்
பெண்சாதிமுகத்தைப்பார்த்தறியான் புலிக்குட்டிதேசிங்கு
புருஷன்முகமும்பார்த்தறியாள் புண்ணியராணியம்மாள்
இரங்கனைநோக்கிப்பூசைசெய்தாளாம் ராணியம்மாளும்
மூன்றேமுக்கால்நாழிபூசைகள்செய்துமுழுதும்ஆண்டிருந்தாள்
இப்படிபன்னிரண்டுவயதுவரைக்கும் ஏகசக்ராமாண்டாள்
செஞ்சிதேசத்தையாண்டிருந்தானே சிங்கக்குட்டிபோலே
அந்தமட்டோடேயிருக்கதுபாரும் அந்தசெஞ்சிசேதி

டில்லிராசன் நவாப்பினிடத்தில் பகுதிக்கனுப்புதல்.

டில்லியிலிருக்கும்டில்லிதுரையும் சேதியென்னசொன்னான்
அண்ணாவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு
ஐம்பத்தாறுதேசராசரும் பகுதிகட்டுகிறார்களா
நாற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்கும் எசமானனான
ஆற்காட்டையாளும் நவாப்புசைதுல்லா அவனுங்கட்டினாரோ
சக்திசக்திசேதிசொல்லும் ராசலிங்கபாபு
அந்தசேதியைக்காதிலேகேட்டான் ராசலிங்கபாபு

முழங்கால்சிலைபோட்டவனும் முன்னேசவாரிசெய்தான்
ஐபாகேனும்ஐபாசேனும் டில்லித்துரையேர்
ஐம்பத்தாறுதேசத்துவேந்தரும் பணமுங்கட்டுவான்
ஆற்காடானும்நவாப்புசைதுல்லா அவனுங்கட்டவில்லை
பன்னிரண்டுவருஷத்தோப்புருமகுதி பணமுங்கட்டவில்லை
அந்தசொல்லைக்காதிலேகேட்டான் டில்லித்துரைதானும்
அண்ணுவாடாதம்பிவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆற்காடானும்நவாப்புசைதுல்லா அறியவெழுதுமென்றான்
ஐபாகேனும்ஐபாகேனும் நவாப்புசைதுல்லா
பன்னிரண்டுவருஷந்தோப்புருப்பகுதி பணமுங்கட்டவில்லை
நூற்றியெழுபத்திரண்டுபாளையப்பட்டு உனக்கேவாளும்
தேசத்துப்பணமுமுன்னிடபணமும் டில்லிக்குவரவில்லை
கட்டுதாளையிலனுப்பினலாச்சுது யிந்தபணத்தையெல்லாம்
இல்லாதேபோனல்நவாப்பைபிடித்து இடுவேன்சிறையிலென்றான்
சிறையிற்போட்டுமானபங்கஞ் செய்துஅனுப்புவேனென்றான்
அந்தப்படிக்குயெழுதிமுடித்தான் அந்தவோலையைத்தான்
நீயேவாடாநீயேவாடா அர்க்காருப்பய்யா
ஐம்பதுபேர்டலாய்த்துமாரை அதிரக்கொண்டுவோடி
அரிக்கத்துபண்ணிபணத்தைவாங்கடா அர்க்காருப்பய்யா
ஆனுல்நல்லதாகட்டுமென்று அவனுமோடினான்
பத்துநாளையிலாற்காடுதேசம் பகுதிகேட்கவந்தான்
சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
டில்லியிலிருந்துஓலைவந்தது நவாப்புசைதுல்லா
ஓலையைப்பிரித்துவாசித்துப்பாரும் நவாப்புசைதுல்லா
வாசித்துப்பார்த்துசேதியெனக்கு வகுத்துசொல்லுமென்றான்
அந்தவார்த்தையைக்காதிற்கேட்டான் நவாப்புசைதுல்லா
டில்லிபேச்சைக்காதிற்கேட்டு இடுக்கிட்டெழுந்தானும்
அண்ணுவாடாதம்பிவாடா ரங்கநாதப்பிள்ளை
டில்லியிலிருந்துஓலைவந்தது ரங்கநாதப்பிள்ளை
ஓலையைப்பிரித்துவாசித்துச்சொல்லும் ரங்கநாதப்பிள்ளை
ஆனல்நல்லதாகட்டுமென்றான் ரங்கநாதப்பிள்ளை
ஓலையைப்பிரித்துச்சேதியுரைத்தான் ரங்கநாதப்பிள்ளை
கேட்டவுடனேமனதுகலங்கி இடிந்துடைந்தான்
கஜானுதிறந்துதிரவியமெல்லாங் கண்ணலேதான்கண்டான் [illegible]
அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கரே [illegible]
களஞ்சியபணமும்டில்லிபணமும் கட்டுபோகவேண்டும் [illegible]
அதிகமாமோகுறையுமோ அறிந்துசொல்லுமென்றான் [illegible]
அந்தப்பேச்சைக்காதிற்கேட்டான் பங்காருநாய்க்கரும் [illegible]
களஞ்சியபணத்தைக்கணக்கிட்டுபார்த்து [illegible]
ஐபாகேனும்ஐபாசேனும் நவாப்புசைதுல்லா [illegible]
டில்லிபணத்திற்குகளஞ்சியபணம் [illegible]

கணக்கைப்பார்த்துதோப்புருபணத்தை சடுதியிலெழுபுமென்றான்
இருபதுநாளில்டில்லியணத்தை யெடுத்தனுப்புமென்றான்
ஆளுக்கல்லதாகட்டுமென்று அவனுமோடிவந்தான்
ஐயாகேளும்ஐயாகேளும் அர்க்காருபாப்பையா
கணக்கைச்சோதித்துடில்லிபணத்தைக் கடுககொண்டுவாரேன்
சலாஞ்செய்துபாட்சாபணத்தைச் சலுதிகொண்டுவாரேன்
இருபதுநாளில்பாட்சாபணத்தை யெடுத்துக்கொண்டுவாரேன்
அப்படியேபோய்வாரும்சலுதியில் அர்க்காருபாப்பையா
ஆளுக்கல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
அந்தமட்டோடேதவாப்புசைதுல்லா அரசுசெய்யலுற்றான்
கோயம்பிநந்துசைதுல்லாவும் குருராமயனைழுந்தாளும்
அண்ணுவாடதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
பெரியகணக்குரங்காதப்பிள்ளையைப் பிடித்துவாருமென்றான்
நல்லதென்றுபங்காருநாய்க்கன் நாடிபோடிவந்தான்
சந்திசலதிபோடிவாடா நீ ரங்கநாதப்பிள்ளை
ஸ்நானஞ்செய்துபூசைமுடித்துச் சாப்பிட்டிளைப்பாறி
அதிகசந்தோஷங்கொண்டேயிருக்கும் அருமைக்கணக்கப்பிள்ளை
அந்தசொல்லைக்காதிலேகேட்டான் ரங்கநாதப்பிள்ளை
கணக்கையெடுத்துசலாஞ்செய்து கடுகபோடிவந்தான்
ஐயாகேளும்ஐயாகேளும் ரங்கநாதப்பிள்ளை
நாற்பதெழுபத்திரண்டுபாளையப்பட்டு நமக்கேயாளும்
பாளையப்பட்டுராசதுவைகள் பகுதிகட்டுறார
நிலுவைபொன்றுமில்லாதவர்கள் நிலையாய்கட்டுறார
கட்டாதிருக்கும்ராசதுவைகளைக் கடுகச்சொல்லுமென்றான்

இராசாக்கள்பகுதிகட்டும்விபரம்.

தேசத்துராசதுவைகளையும் தெரியவேசொல்லுமென்றான்
ஆளுக்கல்லதாகட்டுமென்று அவனுமேசொல்லலுற்றான்
ஐயாகேளும்ஐயாகேளும் நவாப்புசைதுல்லா
சேத்துப்பட்டுதோவுத்துக்காரனும் திறைபணங்கட்டிவாரான்
திருவண்ணாமலைசம்பதிதுவையும் திறைபணங்கட்டிவாரான்
கள்ளக்குறிச்சிகாளுசாப்புகட்டிவாரான்பணத்தை
மதுராசிலைமலையானத்தாளும் வாய்தாபணங்கட்டுகிறான்
திண்டிகல்லுகோலுமூரத்தாளும் திறைபணங்கட்டுகிறான்
அரியலூர்பெரியதுவையும் பணமுங்கட்டிவாரான்
ஆரணிக்கோட்டைராக்காருவும் பணமுங்கட்டிவாரான்
சங்கிலிப்பட்டுத்துருமேதாரும் பணமுங்கட்டிவாரான்
எட்டியாபுரத்துபாளையக்காரன் பணமுங்கட்டிவாரான்
இமிரிக்கோட்டைவேசிக்குமம்முது பணமுங்கட்டிவாரான்
